(25)

**நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.க.கோபால கிருஷ்ணன், B.E.,**

**ந.க.எண்.765/2019/திவம2** **நாள்.10.02.2020.**

பொருள்: தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொகுப்பு கட்டிடங்கள் - நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மண்டலம் - திருவள்ளூர் மாவட்டம் - ஊத்துக்கோட்டை வட்டம் - பூச்சி அத்திப்பேடு கிராமம் - சர்வே எண்.25pt-ல் 48728 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில், பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் Stilt மற்றும் நான்கு தளங்கள் கொண்ட 16 பிளாக்குகளில் 1152 EWS குடியிருப்பு கட்டிடங்கள், Primary School, Nursery School-இரண்டு, Primary Health Centre, Community Hall, Ration Shop-மூன்று ஆகியவற்றுடன் 43641.38 சமீ கட்டிடப் பரப்பில் அமையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய கட்டிட வரைபடங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. Executive Engineer, Division-04, Tamil Nadu Slum Clearance Board, Chennai அவர்களின் கடிதம், Lr.No.151/SCB Dn.IV/JE(P)/2015, நாள்.04.02.2019(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.07.02.2019)(e-DCR unique ID No.SCR-15/10/2019 : 156899).
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை அவர்களின் கடித எண்.SCB/SP/8214/2018, நாள்.20.01.2020.
3. அரசாணை(நிலை) எண்.102, வருவாய் (நி.மு.7) துறை, நாள்.01.03.2018.
4. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யுடி(4)-1), நாள்.04.06.2004.
5. இவ்வலுவலக கடிதம், இதே எண், நாள்.28.01.2020 (நன்னிலை வரி கட்டணம் செலுத்தக் கோரியது).
6. Executive Engineer, Division-04, Tamil Nadu Slum Clearance Board, Chennai அவர்களின் கடிதம், Lr.No.151/SCB Dn.IV/JE(P)/2015, நாள்.03.02.2020 (நன்னிலை வரி செலுத்திய விவரம்).
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
8. மனுதாரரின் Online மனு எண்.2019054020321313, நாள்.15.10.2019 மற்றும் e-DCR unique ID No.SCR-15/10/2019 : 156899.
9. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம், ந.க.எண். 11720/2019/சிபி, நாள்.22.01.2020.

*****

**உத்தரவு :**

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பூச்சி அத்திப்பேடு கிராமம், சர்வே எண்.25pt-ல் 48728 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில், பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் Stilt மற்றும் நான்கு தளங்கள் கொண்ட 16 பிளாக்குகளில், ஒவ்வொரு பிளாக்குகளிலும் 72 குடியிருப்புகள் வீதம் 1152 EWS குடியிருப்பு கட்டிடங்கள், Primary School, Nursery School-இரண்டு, Primary Health Centre, Community Hall, Ration Shop-மூன்று ஆகியவற்றுடன் 43641.38 சமீ கட்டிடப் பரப்பில் அமையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய கட்டிட வரைபடங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி கோரி, பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

EXECUTIVE ENGINEER
DIVISION - IV
Tamilnadu Slum Clearance Board
T.P. Chatram, Chennai-600 010.

..2..

மனையிடத்தின் பரப்பு = 48728 சமீ

கட்டிடப் பரப்பு :

**Residential Flats : Stilt + 4 Floors**

| | | |
|---|---|---|
| No.of units per Floors | = | 18. |
| No.of units in 1 Block | = | 72. |
| No.of Blocks | = | 16. |
| Total Units | = | 1152. |
| Residential Builtup Area | = | 42279.68 Sq.m. |
| Ration Shop-03 Nos | = | 128.46 Sq.m. |
| Community Hall | = | 261.083 Sq.m. |
| Nursery School-02 Nos | = | 216.96 Sq.m. |
| Primary School-01 Nos | = | 450.83 Sq.m. |
| Primary Health Centre-01 | = | 304.37 Sq.m. |
| Total FSI Area | = | 43641.38 Sq.m. |

FSI = 0.89.

PC = 25.33 %.

**OSR**

| | | |
|---|---|---|
| 1 | = | 418.00 Sq.m. |
| 2 | = | 1681.05 Sq.m. |
| 3 | = | 471.81 Sq.m. |
| 4 | = | 1444.76 Sq.m. |
| 5 | = | 892.12 Sq.m. |
| Total | = | 4907.75 Sq.m. |

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பூச்சி அத்திப்பேடு கிராமம், சர்வே எண்.25pt-ல் 48728 சமீ பரப்பளவு கொண்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மனையிடத்திற்கு **'A முதல் G வரை, H முதல் U வரை, V முதல் Y வரை'** என எல்லையிட்டு, **ம.வ/ந.ஊ.உ.இ(திவம). எண்.17/2020** என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையிடத்தில், மேற்கண்டவாறு Stilt மற்றும் நான்கு தளங்கள் கொண்ட கொண்ட 16 பிளாக்குகளில் ஒவ்வொரு பிளாக்குகளிலும் 72 குடியிருப்புகள் வீதம் 1152 EWS குடியிருப்பு கட்டிடங்கள், Nursery School-இரண்டு, Primary Health Centre, Community Hall, Ration Shop-மூன்று ஆகியவற்றுடன் 43641.38 சமீ கட்டிடப் பரப்பில் அமையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய கட்டிட வரைபடங்களுக்கு **க.வ/ந.ஊ.உ.இ (திவம).எண்.05(அ முதல் ஓ வரை)/2020(பதினோரு தாள்கள்)** என எண்ணிடப்பட்டு பின்வரும் சிறப்பு நிபந்தனை மற்றும் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

EXECUTIVE ENGINEER
DIVISION - IV
Tamilnadu Slum Clearance Board
T.P. Chatram, Chennai-600 0..

29



பார்வை 6-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி **ரூ.1,16,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்)**-ஐ செலுத்தியதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rule made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. பார்வை 5-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில், நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   "சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"
4. மத்திய மற்றும் மாநில அரசு பிற துறைகளிடமிருந்து சம்மந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் பெறப்பட வேண்டிய அனுமதிகளை பெற்ற பின்னரே, இந்நிறுவனத்திற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படல் வேண்டும்.
5. தீயணைப்பு துறையின் நிபந்தனைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
6. "கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில், பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்."

EXECUTIVE ENGINEER
DIVISION - IV
Tamilnadu Slum Clearance Board
T.P. Chatram, Chennai-600 010.

7. "The Provisions in the G.O(Ms).No.17, H & UD (UD4(3)), Department", dated: 05.02.2016, relating to installation and use of solar energy system, should be followed.
8. மேற்படி மனை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள OSR திறவெளி இடத்தில் கட்டிடங்கள் ஏதும் கட்டப்படாமல் வேறு எந்த உபயோகமும் மேற்கொள்ளப்படாமல் காலியாக இருத்தல் வேண்டும்.

<u>நிபந்தனைகள் :</u>

1. உத்தேச **தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு** கட்டிட உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு, வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால், இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர், தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில், விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.1)துறை, நாள்.03.11.2004-ன்படி, செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி, உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது, அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சட்டம், 1974 பிரிவு 25 (Water act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER
DIVISION - IV
Tamilnadu Slum Clearance Board
T.P. Chatram, Chennai-600 030.

13. 1997-ம் ஆண்டின் ஊராட்சி கட்டிட விதிகள் நிறைவு செய்யும் வகையில் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

14. உத்தேச கட்டிட இடத்தினை சுற்றிலும் நிழல்தரும் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும்.

15. Tamil Nadu Combined Development & Building Rules '2019-ஐ நிறைவு செய்து கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இத்துடன் இரண்டு தொகுப்புகள் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு, கட்டுமானத்திற்கு இறுதி ஒப்புதல் பெற, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும், ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை, இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், 10/2/2020
திருவள்ளூர் மண்டலம்

10/2/2020

**இணைப்பு :**

ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம்-02 தொகுப்பு (11 x 2 = 22).

**பெறுநர் :**

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**நகல் :**

Executive Engineer.,
Division-04,
Tamil Nadu Slum Clearance Board,
T.P.Chatram, Chennai - 600 010.

22/7/2020
EXECUTIVE ENGINEER
DIVISION - IV
Tamilnadu Slum Clearance Board
T.P. Chatram, Chennai-600 010.

(35)

**பூச்சிஅத்திப்பேடு ஊராட்சி கட்டிட அனுமதி உத்திரவு**
**எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்**
ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை- **திரு.சோ.அன்பு,** தலைவர்

**அனுமதி.எண்.** 02/2020-21

நாள்:21.07.2020

**பொருள்:** புதிய கட்டிடம் கட்ட அனுமதி - எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் பூச்சிஅத்திப்பேடு ஊராட்சி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் . சர்வே .எண் .25 - ல் பரப்பு .48,728 ச.மீ-ல் புதிய கட்டிடம் கட்ட அனுமதி கோரியது — அனுமதி வழங்குதல்-சார்ந்து

**பார்வை:**
1. அரசாணை எண்.255(சி2) துறை நாள் 18.08.1997
2. நகர் ஊரமைப்புத் துறை இயக்குனர் சென்னை அவர்களின் நேமுக.எண்.25718/03/ எல்எ2 நாள்20.10.2003
3. இயக்குனர் ஊரக வளர்ச்சி துறை சென்னை நேமுக.எண்.83921/2003/ பிஎச்2 நாள்14.11.2003
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் ந.க.எண் :765 /2019/திவம2 நாள் 10.02.2020
5. வட்டார வளர்ச்சி அலுவலர் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ந.க.எண் : 364/2020/அ6 நாள் :16.06.2020
6. நிர்வாக பொறியாளர் கோட்டம் 4 தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அவர்களின் நக எண் : 151/இ.நி.பொ(தி)/கோ-4/2015 நாள் -18.07.2020

--------0--------

**உத்தரவு:-**

பார்வை 4,5 மற்றும் 6 காணும் கடிதங்களின் படி எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த பூச்சிஅத்திப்பேடு ஊராட்சியில் கிராம சர்வே எண் 25 ல்- பரப்பு **48,728** -ச.மீ ல் புதியதாக 1152 அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள், Primary School, Nursery School,Primary Health center, Community Hall, Ration Shop, கட்டுவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகள் அனுமதித்து உத்திரவிடப்படுகின்றது.

மேற்படி அனுமதியானது 21.07.2020 முதல் 20.07.2021 வரை செல்லுபடியாகும். கீழ்குறிப்பிடபட்டவாறு கட்டிட உரிமகட்டணங்கள் ரூ 29,63,880 DD No. 502630 Date .18.07.2020 . Bank. ICICI BANK . பலவகை ரசீது எண்: 10210 நாள்: 21.07.2020 ஊராட்சிக்கு செலுத்தப்பட்டது. தீர்மான எண் : 84 நாள்: 20.07.2020

| | | |
|---|---|---|
| 1. | வளர்ச்சி கட்டணம்<br>(48728 Sqm X Rs.25/-) | Rs .12,18,200/- |
| 2. | கட்டிட வரைபட ஒப்புதல் கட்டணம்<br>~~(43641.38 (or) (48728 Sqm X Rs.40/-)~~ | Rs .17,45,680/- |
| | Total ( பூச்சிஅத்திபேடு ஊராட்சி தலைபில் )<br>(100% of Land & Building Develoment Charges) | Rs .29,63,880/- |

EXECUTIVE ENGINEER
DIVISION - IV
Tamilnadu Slum Clearance Board
T.P. Chatram, Chennai-600 010.

21/7/20
தலைவர்
பூச்சி அத்திப்பட்டு ஊராட்சி

கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தில் முன்பக்கத்தில் 10 அடிக்கு குறையாமலும் பின் பகுதியில் 15 அடிக்கு குறையாமலும் இருபக்கங்களிலும் 5 அடிக்கு குறையாமலும் இடைவெளி விடபட்டு இருக்க வேண்டும்..
2. இந்த ஒப்புதல **21.07.2020 முதல் 20.07.2021** வரை வரை மட்டும் செல்லுதல் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்திலும் அரசினால் விதிகளில் ஏற்பட்டுத்தப்பட்டுள்ளது. ( பார்வை 1 2 3 ஆகியவைகளில் குறிப்பிடபட்டவாறு) இந்த எல்லை கட்டு பாடுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரரின் சம்பந்தம் இல்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்ய கூடாது.
4. கட்டிட வேலை நடக்கும் போதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்யவரும் அதிகரிகளுக்கு அங்கிகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்கும் இடங்களில் மேற்படி வரைபடங்கள் வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்கும் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதி புதுப்பித்து கொள்வது அவசியமாகும்.
6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மறுத்தல் ஏதோனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குறிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் நிர்வாக அலுவளகத்திற்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பின் தான் மறுத்தல் கட்டடம் கட்டவேண்டும்.
7. கட்டடம் கட்ட உத்தரவு பொய் பதிவுகள் மூலம் பெறுவதாகவோ அல்லது ஏதேனும் கட்டட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்தரவை ரத்து செய்ய நிர்வாக அலுவலர்கு உரிமை உண்டு.
8. புதிதாக கட்டப்படும் கட்டட இடங்கள் எந்த நேரங்களிலும் சுத்தமாக பொதுசுகாதார கேடு விளையாத வகையில் வைத்திருக்க வேண்டும்.
9. மனுதாரர் கட்டிடத்தை கட்டிமுடித்த பின் இவ்வலுவலகத்திற்கு தெரிவித்து வீட்டு வரி செலுத்திய பின் குடியேர வேண்டும்.
10. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடங்களுக்குள்ளேயே நிறுத்திவைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும் கழிவுநீர் தொட்டிகளும் அமைத்து கொள்ளவேண்டும்.
11. கட்டடம் தொழிற்சங்கங்களுக்காகவோ அல்லது வேறு தொழிகாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டபடவிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலர் இடமிருந்தபடி தொழிளாலர்கள் ஆய்வாளர்களிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் மற்றும் செயலர் நகர் ஊரமைப்பு ஆகியோரிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.
12. அங்கிகரிக்கபட்ட படங்களில் படியே கட்டிடம் முடிக்கப்பட்டபின் ஊராட்சியலிருந்து சான்றுதல் பெற்று கொள்ளவேண்டும்.
13. மழைநீர் சேகரிப்பு படுகை கண்டிப்பாக கட்டபட வேண்டும்.

J. A... 21/7/20

தலைவர்

பூச்சி அத்திப்பேடு ஊராட்சி

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்

தலைவர்
பூச்சி அத்திப்பேடு ஊராட்சி
எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

**நிர்வாக பொறியாளர் ,**

**கோட்டம்- 4 ,**

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ,**

**தா.பி.சத்திரம்,**

**சென்னை-600010**

22/7/2020

**EXECUTIVE ENGINEER**
**DIVISION - IV**
**Tamilnadu Slum Clearance Board**
**T.P. Chatram, Chennai-600 010.**

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்